Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 194 /2010

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலாஜி | Father/Husband Name | : ராஜசேகரன் |
| Age | : | Calling | : |
| Date | : 07.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 day of 05.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி கட்டாய பணி ஒய்வில் மதுரையில் குடியிருந்து இருந்து வருகிறேன். இம்மேதகு நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை கொடுக்கப்பட்டது, அதன் அடிப்படையில் ஆஜராகி உள்ளேன். வழக்கு கோப்புகளை பார்வையிட்டதிலிருந்து இந்த வழக்கு கோப்பின் முதல் தகவல் அறிக்கையிலும், சாட்சி பட்டியலிலும் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நான் இவ்வழக்கில் எவ்வித புலன்விசாரணையும் மேற்கொள்ளவில்லை, நீதிமன்ற வழக்கு கோப்பு மற்றும் வழக்கு கோப்பில் (CD File) உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

**நீதிமன்ற கேள்வி**

1) நீதிமன்றத்தில் உள்ள கையொப்பங்களை இதற்கு முன்னர் பார்வையிட்டுள்ளேனா என்றால் இல்லை, இன்றையதினம்தான் பார்வையிட்டேன்.

2) 2010ம் வருடம் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியுள்ளேனா என்றால் இல்லை, மேலூர் காவல்

நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியுள்ளேன், கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பு கொடுத்துள்ளார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

(வழக்கு கோப்பில் காவல் ஆய்வாளர் என்ற இடத்தில் உள்ள கையொப்பத்தையும், நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பத்தை நீதிமன்றம் பார்வையிட்டதில் கையொப்பம் ஒன்றுபோல் இல்லை, வெவ்வேறாக உள்ளது ).